# இரண்டாம் பருவம் – தொகுத்தறித் தேர்வு – 2025

**7 – ஆம் வகுப்பு** **தமிழ்**

நேரம் : 2.00 மணி மதிப்பெண் : 60

அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:- 6×1=6

1. ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் ________
   அ) வீடு ஆ) கல்வி இ) பொருள் ஈ) அணிகலன்
2. மக்களுக்கு வருமானம் கொடுத்து அவர்களைக் காப்பாற்றியது______
   அ) பற்று வரவு ஆ) சிக்கனம் இ) கைத்தொழில் ஈ) கப்பல்
3. போர் இல்லாத உலகில் _______ நிலவும்.
   அ) பதற்றம் ஆ) சாந்தம் இ) சோர்வு ஈ) வெறுப்பு
4. நகைச்சுவை உணர்வு வெளிப்படுமாறு வரையப்படும் ஓவியம்____ ___________
   அ) குகை ஓவியம் ஆ) சுவர் ஓவியம்
   இ) கண்ணாடி ஓவியம் ஈ) கேலிச்சித்திரம்
5. ' நாடெங்கும் ' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.
   அ) நா+டெங்கும் ஆ) நாடு + டெங்கும் இ) நா + எங்கும் ஈ) நாடு + எங்கும்
6. ' எழுத்து + ஆணி ' என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
   அ) எழுத்து ஆணி ஆ) எழுத்தாணி இ) எழுத்துதாணி ஈ) எழுதாணி

ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக:- 4×1=4

7. கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் ________________
8. அழியாச் செல்வம் பாடலின் ஆசிரியர் ___________
9. கல்வியில்லாத நாடு__________ வீடு
10. கலம்காரி ஓவியம் என்று அழைக்கப்படுவது _________

இ. பொருத்துக:- 4×1=4

11. இயற்சொல் – பெற்றம்
12. திரி சொல் – இரத்தம்
13. திசைச்சொல் – அழுவம்
14. வடசொல் – சோறு

ஈ. ஏவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி. 6×2=12

15. கல்விச் செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகளை எழுதுக.
16. இந்திய நாடு எவற்றில் சிறந்து விளங்கியது?

*7-HSC – TAM -1*

17. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?
18. மலர்கள் எப்போது தரையில் நழுவும்?
19. ' நன்மை செய்வதிலும் தீமை உண்டாகும் ' எப்போது?
20. கல்வி அறிவு இல்லாதவர்கள் பற்றி வள்ளுவர் கூறுவது யாது?
21. திரி சொல்லின் வகைகள் குறித்து விளக்குக.
22. முதல்நிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.

உ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி. 2×3=6

23. மக்கள் விலங்குகளைப் போல வாழக் காரணம் என்ன?
24. கேலிச்சித்திரம் என்றால் என்ன?
25. கல்வியே அழியாத செல்வம் என்பதை விளக்குக.
26. ஓலைச் சுவடி ஓவியங்கள் குறித்து நீங்கள் அறிந்து கொண்டவற்றை எழுதுக.

ஊ) அடிமாறாமல் எழுதுக. 4+2=6

27. ' வைப்புழி ' எனத் தொடங்கும் அழியாச் செல்வம் பாடலை எழுதுக.
28. ' தொட்டனைத்து ' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

எ) கடிதம் எழுதுக. 1×5=5

29. அ) உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத் தர வேண்டி பொது நூலக இயக்குநருக்குக் கடிதம் எழுதுக. ( அல்லது )

ஆ) முன்னுரை – அமைவிடம் – பெயர்க்காரணம் – தொழில்கள் – சிறப்பு மிகு இடங்கள் – திருவிழாக்கள் – மக்கள் ஒற்றுமை – முடிவுரை. இத்தலைப்புகளைக் கொண்டு " எங்கள் ஊர் " பற்றி எழுதுக.

ஏ) நிற்க அதற்குத் தக. 1×5=5

30. ' எனது பொறுப்புகள் ' – ஐந்து எழுதுக.

ஐ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 6×2=12

31. சரியான எழுத்தைக் கொண்டு நிரப்புக.

அ) செய்யுள் – ( பா, கோ ) ஆ) மாதம் – ( தை, பை )

32. இரு பொருள் தருமாறு தொடரில் அமைத்து எழுதுக. ஆறு
33. ஓர் எழுத்து சொற்களால் நிரப்புக

அ) ______ புல்லை மேயும் ஆ) ______ மணம் வீசும்.

34. இடைச்சொல் ' கு ' சேர்த்துத் தொடரை எழுதுக.

அ) மாடு புல் கொடுத்தார் ஆ) செடி பாய்ந்த நீர்

35. வேர்ச்சொல் கொண்டு நிரப்புக.

அ) ______ நடந்தாள்.

ஆ) ______ எழுதினாள்.

36. படிப்போம்; பயன்படுத்துவோம்!

அ) DISCIPLINE ஆ) MODERN ART



TNPSC JOB | www.tnpscjob.com